No.C. 17/2026 09.10.2026

உலக நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு 18.10.2026

கிறிஸ்து இயேசுவில் அன்பிற்கினிய சகோதரிகளே சகோதரர்களே,

கிறிஸ்து என்னும் மாபெரும் ஒளியை நம் மண்ணில் பரவச் செய்த மூவொரு இறைவனின் பெயரால் உங்களை நான் வாழ்த்துகின்றேன். 1926ஆம் ஆண்டு திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் 'உலக நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு' என்னும் வழக்கத்தைத் தொடங்கி வைத்தார். அவ்வகையில், நூறாவது நற்செய்தி அறிவிப்பு ஞாயிறை இவ்வாண்டு நாம் பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். 'கிறிஸ்துவில் ஒன்றிப்போம்; ஒன்றிணைந்து நற்செய்தி அறிவிப்போம்' என்ற மையப்பொருளில் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறைக் கொண்டாடத் திருத்தந்தை லியோ நம்மை அழைக்கிறார். அவர் தனது நற்செய்தி அறிவிப்பு ஞாயிறுக்கான சுற்றுமடலில் குறிப்பிட்டுள்ளவற்றில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

நற்செய்தி அறிவிப்புப் பணியானது முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு நவீன யுகத்தை எதிர்கொண்டிருக்கிறது. இக்காலச் சூழலில் கிறிஸ்துவை அறிவிப்பதற்கான ஆர்வம் நம் அனைவரிலும் இன்னும் அதிகமாய் அணையாத நெருப்புபோல் பற்றியெரிய வேண்டியுள்ளது. கிறிஸ்துவோடு ஒன்றித்திருப்பவரே அவரை படைப்பிற்கெல்லாம் நற்செய்தியாக அறிவிக்க முடியும். எனவேதான், "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!" (யோவா 17:21) என விண்ணகத் தந்தையை நோக்கி மன்றாடிய இயேசு, ஒரே திராட்சைச் செடியின் கொடிகளைப்போல் (யோவா 15:4) நாம் அவரோடு இணைந்திருக்க வேண்டுமென தம் விருப்பத்தை வெளிப்படுத்தினார். தம்மிடையே பிளவுகளையும் ஒருவர் மற்றவரைக் குறித்தத் தவறானப் புரிதல்களையும் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தால் கிறிஸ்துவைப் பறைசாற்ற இயலாது.

நற்செய்தி அறிவிப்புப் பணியில் நாம் அல்ல; அறிவிக்கப்படும் கிறிஸ்துவே மையம் பெறுகிறார். "இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா 2:20) என்னும் புனித பவுலின் வார்த்தைகள் இவ்வுண்மையை உரக்கச் சொல்கின்றன. அன்றாட வாழ்வின் கவனச் சிதறல்களிலிருந்து மீண்டு நமது கண்களை இயேசுவை நோக்கி உயர்த்தும்போது கிறிஸ்து நமது வாழ்வில் மையம் பெறுகிறார். அதன் வழியாக, நாம் நற்செய்திப் பணியாளராகவும் இயேசுவின் சீடராகவும் உருபெறுகின்றோம். இவ்வாறு உருபெற்றவர்கள் ஏதோ ஒரு மறைபொருளை மட்டுமல்ல மாறாக வார்த்தையே மனிதரான இயேசுவைப் பறைசாற்றுகின்றனர்.

நாம் இறைச்சமூகமாய் இணைந்து வருவது நற்செய்தியை அறிவிப்பதற்கே அல்லாமல் வேறு எதற்கும் இல்லை. திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் நற்செய்தி அறிவிப்புப் பணியானது இன்றியமையாத கடமையாக உள்ளது. இதில் எவருக்கும் விதிவிலக்கு இல்லை. ஒவ்வொருவரும் தமது வாழ்வுச் சூழல், அழைத்தல் ஆகியவற்றிற்கு ஏற்ப நற்செய்தியை அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

நற்செய்தி அறிவிப்புப் பணியானது அடிப்படையில் அன்பில் ஊற்றெடுக்கிறது. இந்த அன்பால் தூண்டப்பட்டதாலேயே திருத்தூதர்கள் உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றினர். கிறிஸ்துவின் மீது கொண்ட அளவில்லாத அன்பின் வெளிப்பாடாகவே நற்செய்தியின் பொருட்டு திருத்தூதர்கள், மறைசாட்சியர், நற்செய்திப் பணியாளர்கள் தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்துள்ளனர்.

நற்செய்தி அறிவிப்புப் பணியில் நமது கோட்டாறு மறைமாவட்டம்

1. ஆலயங்களை மட்டுமல்லாமல் குடும்பங்களையும் நாம் வாழும் தெருக்களையும் நற்செய்தி அறிவிப்பின் தளங்களாகப் பாவித்து கிறிஸ்துவைப் பறைசாற்றுவோம்.
2. இறைவார்த்தை வாசிப்பையும் வாசித்ததை நட்பு வட்டங்களில் பகிரும் வழக்கத்தையும் நம் மக்களிடையே வளர்த்தெடுப்போம்.
3. சமூக ஊடகங்களை பொழுதுபோக்கிற்கு மட்டுமல்லாமல் நற்செய்தி அறிவிப்பின் கருவியாக பயன்படுத்துவோம்.
4. பொதுநிலையினரை நற்செய்தி அறிவிப்புப் பணியில் அதிகமாக ஈடுபடுத்தும் முனைப்பில் தேவையான உருவாக்கப் பயிற்சிகளை வழங்கி வாய்ப்புகளை வழங்குவோம்.
5. பங்கு, மறைவட்டம், மறைமாவட்டம் ஆகிய தளங்களில் நற்செய்திக் கொண்டாட்டங்களை ஆண்டுக்கு ஒருமுறையேனும் நடத்துவோம். இதில் பொதுநிலையினரை நற்செய்திப் பணியாளர்களாக ஈடுபடுத்துவோம்.
6. நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு முன்னெடுக்கும் மாதாந்திர தியானம், நற்செய்திக் கொண்டாட்டங்கள் போன்றவற்றில் ஆர்வத்தோடு பங்கேற்க முன்வருவோம்.
7. குறிப்பாக, நமது பங்கு திருவிழாக்களின்போது திட்டமிடப்படும் நற்செய்திக் கொண்டாட்டங்களுக்கு நமது மறைமாவட்ட நற்செய்திப் பணிக்குழுவை மட்டும் அழைப்பதை நடைமுறையாக்குவோம்.
8. கிறிஸ்துவை இன்னும் அறியாத மக்களுக்கும் ஏழ்மையிலுள்ள தலத்திருஅவைகளுக்கும் மறைபரப்புப் பணியை முன்னெடுத்துச் செல்லும் அகில உலகத் திருஅவைக்கு உதவிடும் வகையில் மறைபரப்பு ஞாயிறு சிறப்புக் காணிக்கையை பிரித்து மறைமாவட்ட பொருளாிடம் வழங்குவோம். இக்காணிக்கையானது உரோமைப் பேராயத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை இங்கு நினைவூட்டுகின்றேன்.

தூய ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு நாம் நற்செய்திப் பணியில் தளராமல் ஈடுபட தொடக்கத் திருஅவையோடு உடனிருந்து வலுவூட்டிய அன்னை மரியாவின் பரிந்துரையை நாம் தொடர்ந்து நாடுவோம்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

Sd/-

ஆயர் நசரேன் சூசை (கோட்டாறு மறைமாவட்டம்)

குறிப்பு : இந்தச் சுற்றுமடல் நமது மறைமாவட்டத்தின் அனைத்துக் கோவில்களிலும் நிறுவனங்களிலும் 11.10.2026 ஞாயிறு திருப்பலியில் வாசிக்கப்பட வேண்டும்.